சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

எம் சி ஓ பி எண்.54/2023

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ம் நாள் ம.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசந்திரன் | வயது | 64 |
| த/பெ | மாதன் | வட்டம் | கொதுமுடி |
| விலாசம் | கொதுமுடி கிராமம். தூனேறி அஞ்சல் | மாவட்டம் | நீலகிரி |
| | | தொழில் | கூலி வேலை |

<u>சாட்ச்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 ஆம்எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

விபத்து சம்பந்தமாக எனது மகன் தான் புகார் அளித்தார். எனது மகன் தனியார் மென்பொருள் நிறுவனத்தில் வேலை செய்கிறார். தற்போதும் அங்கு தான் வேலை செய்கிறார். அவருக்கு குடும்ப உறுப்பினர்களுக்கான காப்பீடு உள்ளது என்றால் தற்போது தான் வேலையில் சேர்ந்து உள்ளார். அதனால் காப்பீடு உள்ளதா என்பது தெரியாது. வேலைக்கு சேர்ந்து 2 மாதங்கள் தான் ஆகிறது. சென்னையில் வேலை செய்கிறார். எனது மகனை விசாரித்தால் அவர் எங்கு எத்தனை மாதங்கள் வேலை செய்கிறார் என்ற விபரம் தெரியும் என்றால் சரி தான். விபத்து நடந்த சமயத்தில் நாங்கள் சுமார் 40 பேர் குழுவாக சென்று கொண்டு இருந்தோம் என்றால் சரி தான். விபத்து நடந்த சாலை நல்ல அகலமான சாலை என்றால் சரி தான். விபத்து நடந்தது நள்ளிரவு சுமார் 12.00 மணி இருக்கும் என்றால் சரி தான். அப்போது அதிகமான போக்குவரத்து இல்லை என்றால் சரி அல்ல. நாங்கள் குழுவாக போனதால் நான் நடு சாலையில் சென்றேன் என்றால் சரி அல்ல. ஓரமாகத் தான் சென்று கொண்டு இருந்தேன். விபத்து எந்த

தேதியில் நடந்தது என்றால் 15.01.2023 அன்று நடந்தது. **ம.சா.ஆ.6** ல் மருத்துவமனையின் பெயர் இல்லை என்றால் சரி தான். ம.சா.ஆ.6 ன் அசல் யரிடம் உள்ளது என்றால் ரிலையன்ஸ் நிறுவனத்தில் இருந்து வாங்கி சென்றார்கள். வாங்கி சென்றவரின் பெயர் என்ன என்றால் தெரியாது. மதுரையில் இருந்து வருவதாக சொன்னார்.அவர் பில்லை கேட்டதால் அவரிடம் கொடுத்து விட்டேன். நிரூபண வாக்குமூலத்தில் நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்து உள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் ரிலையன்ஸ் நிறுவனத்தில் இருந்து அசல் மருத்துவ விடுவிப்பு அறிக்கையை வாங்கிச் சென்றதாக கூறவில்லை என்றால் சரி தான். பில்களை வாங்கிச் சென்று இருந்தால் நானும் எனது வழக்கறிஞரிடம் சொல்லி அவரும் மனுவில் கூறி இருப்பார் என்றால் சரி அல்ல. 16.01.2023 முதல் 01.02.2023 வரைக் கான மருத்துவ செலவுகளை நான் எனது மகன் மூலமாக பெற்றுக் கொண்டேன் என்றால் சரி அல்ல. ம.சா.ஆ.7 ல் பில் எண்கள் 10 முதல் 14, 17 முதல் 19, 26 மற்றும் 27 ஆகியவை இன்வாய்ஸ் தான் என்றும் அவைகள் பில்கள் அல்ல என்றால் சரி அல்ல. இரண்டாவது முறையாக நான் எப்போது மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டேன் என்றால் 28.02.2023 முதல் 06.03.2023 வரை அனுமதிக்கப்பட்டேன். அந்த காலத்திற்கான மருத்துவ செலவுகளை மருத்துவமனையில் இருந்து என்னிடம் வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரி தான். ம.சா.ஆ.7 ல் பில் எண்கள் 30 முதல் 34, 36 மற்றும் 37 ஆகிவற்றுக்கான தொகைகளை மருத்துவமனையில் இருந்து மொத்தமாக என்னிடம் வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரி தான். பில் எண்கள் 39 முதல் 41, 47, 51, 53, 54, 64, 71, 78, 82, 88, 93, மற்றும் 96 ஆகியவை பில்கள் அல்ல என்றும் இன்வாய்ஸ்கள் தான் என்றால் சரி அல்ல. பில் எண் 85 என்பது கலர் புகைப்படம் என்றால் சரி அல்ல. பில் எண் 94 என்பது கலர் புகைப்படம் என்றால் சரி

அல்ல. என்னிடம் இருந்து அசல் பில்களை பெற்று சென்றவரிடம் திரும்ப தருமாறு நானோ எனது வழக்கறிஞரோ கேட்கவில்லை என்றால் சரி அல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரி தான். 2 ஆம் எதிர் மனுதாரர் நிறுவனத்தில் இருந்து என்னிடம் பில்களை வாங்கவில்லை என்றால் சரி அல்ல. அதிகமான இழப்பீடு பெறுவதற்காக போலியான கலர் புகைப்படங்களை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல. என் மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் அதனால் 2 ஆம் எதிர் மனுதாரர் எந்த நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரி அல்ல. நான் ஏற்கனவே மருத்துவ காப்பீட்டு நிறுவனத்தில் பில்களுக்கான தொகைகளை பெற்றுக் கொண்டேன் என்றால் சரி அல்ல. விபத்து என்னுடைய கவனக் குறைவால் நடந்தது என்பதால் 2 ஆம் எதிர் மனுதாரர் எந்த நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப் பட்டவர் அல்ல என்றால் சரி அல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகி விட்டன என்றால் சரி அல்ல. எனக்கு நிரந்தர ஊனம் அதிகப்படுத்தி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரி அல்ல.

(1ஆம் எதிர் மனுதாரர் தரப்பில் யாரும் ஆஜர் இல்லை. நீதியின் நலலை கருத்தில் கொண்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

-

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

Sd/- G. Gengaraj.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.